**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 682/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 14.07.2025.**

| | |
|---|---|
| **Name : சோபனா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தருமபுரி மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோனது எனது தகப்பனார் பொன்னுசாமி ஆவார். நான் எனது தகப்பனார் வீட்டிற்கு விடுமுறை தினம் என்பதால் வந்திருந்தேன். கடந்த 18.05.2024 ம் தேதியன்று எனது தகப்பனார் வீடு பூங்கா நகரில் உள்ளது. கடந்த 22.05.2024 ம் தேதி காலை 09.00 மணிக்கு எனது அப்பா Hero Honda இருச்சக்கர வாகனம் TN 2949 என்ற வாகனத்தில் அவருடன் நான் மற்றும் எனது மகன் ஸ்ரீவர்ஷன் ஆகியோருடன் ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்தில் வண்டியை நிறுத்திவிட்டு பேருந்து நிலையத்தை ஒட்டி சேலம் பேருந்து செல்லும் பேருந்துகள் நிறுத்தும் இடத்தில் நின்றுக்கொண்டிருந்தார். நான் சற்றுத்தள்ளி வேறு இடத்தில் நின்றுக்கொண்டிருந்தேன். ஒரு அரசு பேருந்து வருவதைப்பார்த்து கூட்டம் சற்று தள்ளி வந்தது. எனது தந்தையார் மீது தங்கம் பேருந்து நேருக்கு நேராக வேகமாக வந்து மோதியது.

2. எனது தந்தையாருக்கு விபத்தின் காரணமாக கால், கை மற்றும் தலை ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுச்சென்று சேர்த்தோம். எனது தந்தையார் சம்பவயிடத்திலேயே

இறந்துவிட்டார். விபத்து சமயத்தில் எனது தந்தையாருக்கு பக்கத்தில் இருந்த ஒரு ஆண் நபர் மீதும் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. பேருந்து விபத்திற்கு பிறகு அங்கேயே நின்றுவிட்டது. எனது தந்தையார் உடைய உடலை சவங்கிடங்கில் வைத்தார்கள். எனது தந்தையார் இறப்பிற்கு தனியார் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவே காரணமாகும்.

3.இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். தங்கம் பேருந்தின் ஓட்டுநரை நான் பதட்டத்தில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4. போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக எனன்னை விசாரித்தார்களா என்றால் சேலம் சவகிடங்கில் உள்ள போது போன் முலமாக விசாரித்து விட்டு என்னை ஜலகண்டபுரம் காவல் நிலையத்திற்கு வரசொன்னதின் பேரில் வந்தேன். நான் வரும் போது போலிசார் புகார் எழுதி வைத்திருந்தார்கள் என்றால் ஆமாம். நான் போனில் சொன்னதை எழுதி வைத்து அதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

5. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். நான்கொடுத்த புகாரிலும் அவ்வாறு தான் எழுதியிருந்ததது என்றால் ஆமாம். தங்கம் பேருந்து ஒட்டுனர் பெயர் மற்றும் பேருந்து பதிவு எண் தெரியாது என்றால் ஆமாம். நான் ஒட்டு நர் விபரம் மற்றும் இதர விபரமும் புகார் பற்றி போலிசாரிடம் சொல்லும் போது சொல்லவில்லை என்றால் ஆமாம்.

6. எனது அப்பாவிற்கு பிறகு வேறு நபர் அடிபட்ட நிலையில் அவருடைய பெயர் விபரம் எனக்கு தெரியாது என்று தான் சொன்னேன் என்றால் ஆமாம். சம்பவ நடந்தவுடன் போலிசார் உடனடியாக வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் கல்யாணம் ஆகும் முன்பாக ஜலகண்டபுரத்தில் எத்தனை ஆண்டுகள்

இருந்தேன் என்றால் 23 அண்டுகள் இருந்தேன். நான் பட்டபடிப்பு படித்துள்ளேன் என்றால் ஆமாம். தங்கம் பேருந்து தினமும் அந்த பகுதிக்கு வந்து செல்லும் என்றால் எனக்கு தெரியும் . 23 ஆண்டுகளில் தங்கம் பேருந்து வேறு விபத்து ஏற்படுத்தியதை பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

7. பொதுவாக ஒரு தடத்தில் பேருந்து செல்லும் போது அதன் ஒட்டுனருக்கு அதன் பௌதீக தன்மை மற்றும் இடம் தெரியும் என்றால் தெரியும்.தங்கம் பேருந்து ஒட்டுனர் 17 ஆண்டுகாலமாக ஒட்டுனராக வேலை செய்வதால் அவர் அதிவேகமாக செல்லவில்லை என்றும், பேருந்து அதன் ஒட்டுனர் சரியாக வந்தார் என்றும் , திடிரென பிரேக் பிடிக்கததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த பகுதியில் ஸ்பீடு பிரேக் உள்ளதால் பேருந்து வேகமாக வருவதற்கு வாய்ப்பில்லை.

8. அந்த பகுதியில் பிரேக் பிடிக்கததால் தான் வண்டி வளைக்க முடியாமல் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. தங்கம் பேருந்து பிரேக் பிடிக்காத நிலையில் இந்த விபத்து கடவுளின் செயல் என்ற எதிர்வாதத்தின் அடிப்படையில் ஒட்டுனர் மீது எந்த குற்றசாட்டு சொல்லமுடியாது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இரு சக்கர வாகனம் நிறுத்திய பகுதியில் இரு சக்கர வாகனத்தை நிறுத்த அனுமதிக்கபட்ட பகுதி என்றால் ஆமாம். அநத் இடத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் என்ற பலகை உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் நிறுத்திஇடத்தில் வழக்கமாக இருசக்கர வாகனம் வேறு நபர்கள் நிறுத்துவர்கள் என்றால் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.